## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## புகையில்லா போகி பண்டிகை 2020

## பத்திரிக்கை செய்தி

தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளுக்கு முதல் நாள் நாம் “போகிப் பண்டிகை” கொண்டாடகிறோம். இந்நாளில் இயற்கையோடு ஒன்றி கிழிந்த பாய்கள், பழைய துணிகள், தேய்ந்த துடைப்பங்கள், தேவையற்ற விவசாய கழிவுகள் ஆகியவற்றைத் தீயிட்டு கொளுத்தி கொண்டாடுவது போகிப் பண்டிகையாகும்.

ஆனால் நகர்ப்புறங்களில் டயர், டியூப், ரப்பர், பிளாஸ்டிக் மற்றும் செயற்கைப் பொருட்கள் எரிப்பதை போகிப் பண்டிகை என கொண்டாடுகிறார்கள். இதனால் வயதானவர்கள், குழந்தைகள், நோயாளிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி சுவாச நோய், இருமல் மற்றும் நுரையீரல் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் மார்கழி பனி காலத்தில் போகி தினத்தன்று கரும்புகை மூட்டத்தால் ஆகாய விமானங்கள் தரையிறங்குவதற்கும் புறப்படுவதற்கும், சாலை போக்குவரத்திற்கும் தடை ஏற்படுகிறது. இது போன்ற செயல்கள் மூலம் காற்றை மாசுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும்.

நவீன யுகத்தில் எல்லாப் பொருட்களையும் மறுசுழற்சி செய்து வருமானம் ஈட்டும் விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இக்கால கட்டத்தில் போகி தினத்தன்று ரசாயன பொருட்களை எரித்து சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதை தவிர்த்து புகையில்லா போகியை கொண்டாடுவது நமது அனைவரது கடமையாகும். இதன் அடிப்படையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 17 ஆண்டுகளாக போகிபண்டிகைக்கு முன்பு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த வருடங்களில் பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டயர், டியூப் போன்றவற்றை எரிப்பது வெகுவாக குறைந்துள்ளது.

அதன்படி இந்த 2020 ம் ஆண்டும் சுற்றுச்சூழல் மாசு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சென்னை மாநகரம் மற்றும் அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசு, மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்கள் 08.01.2020 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் புகையில்லா போகி உறுதிமொழியை படித்து, விழிப்புணர்வு பிரச்சார வாகனங்களை கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும் பள்ளி கல்வித்துறையின் மூலம் புகை மாசு பற்றி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும்

நடவடிக்கை எடுக்கப்பட்டது. செய்தித்தாள்களில் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலும் பத்திரிக்கை செய்தி, ஊடகங்கள், சுவரோட்டிகள், வானொலி மற்றும் வாட்ஸ்ஆப் மூலமும் பிரச்சாரம் செய்யப்பட்டது. மேலும் இந்திய மருத்துவச் சங்கம் மூலமும் புகையினால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து போகித்திருநாளான 14.01.2020க்கு முந்தைய நாள் மாலை தொடங்கி அதிகாலை வரை சென்னை பெருநகர மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அலுவலர்கள், பணியாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் மாநகர காவல் துறையினர் அடங்கிய 30 கண்காணிப்பு குழுக்கள், தடைசெய்யப்பட்ட பொருட்களை எரிப்பதைத் தடுக்கும் விதமாக ரோந்து பணியில் ஈடுபட்டார்கள்.

ரோந்து பணியின் போது சென்னை மாநகரின் சில இடங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் உட்பட பழைய கழிவுப்பொருட்களை எரிப்பது கண்டுபிடிக்கப்பட்டு தண்ணீர் மற்றும் மணல் கொண்டு அணைக்கப்பட்டது. ஒரு சில இடங்களில் பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. சில இடங்களில் எரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பழைய டயர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த பழைய டயர்கள் சுமார் 1.25 டன் கும்மிடிப்பூண்டியில் உள்ள டயர் மறுசுழற்சி தனியார் ஆலைக்கு அனுப்படவுள்ளது. பிளாஸ்டிக் கழிவுகள் சுமார் 500 கிலோ அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைக்கு அனுப்படவுள்ளது.

போகிப்பண்டிகையின் போது சென்னை மாநகரத்தின் சுற்றுச்சூழல் காற்று தரத்தினை கண்காணிக்கும் பொருட்டு, வாரியம் போகிப்பண்டிகையின் முந்தைய நாள் (13.01.2020) மற்றும் போகிப்பண்டிகை நாளிலும் (14.01.2020), 15 இடங்களில் 24 மணிநேரமும் காற்றின் தரத்தினை கண்காணிப்பு செய்தது.

இந்த ஆய்வின்படி 13.01.2020 காலை 8 மணி முதல் 14.01.2020 காலை 8 மணி வரை சுற்றுச்சூழல் காற்று தரத்தினை அளவீடு செய்ததில், காற்றில் கலந்துள்ள கந்தக–டை–ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகிய வாயுக்களின் அளவுகள் அனைத்து 15 மண்டலங்களிலும் அனுமதிக்கப்பட்ட தர அளவான 80 மைக்ரோகிராம்/கனமீட்டர்– க்கு உட்பட்டு இருந்தது. காற்றில் கலந்துள்ள $PM_{2.5}$ நுண்துகள்களின் அளவு குறைந்தபட்சமாக 72 மைக்ரோகிராம்/கனமீட்டர் முதல், அதிகபட்சமாக 184 மைக்ரோகிராம்/கனமீட்டர் வரை இருந்தது. நிர்ணயிக்கப்பட்ட $PM_{2.5}$ தர அளவு 60 மைக்ரோகிராம்/கனமீட்டர் ஆகும். மேலும்

காற்றில் கலந்துள்ள $PM_{10}$ நுண்துகள்களின் அளவு குறைந்தபட்சமாக 146 மைக்ரோகிராம்/கனமீட்டர் முதல் அதிகபட்சமாக 274 மைக்ரோகிராம்/கனமீட்டர் வரை இருந்தது. நிர்ணயிக்கப்பட்ட $PM_{10}$ தர அளவு 100 மைக்ரோகிராம் /கனமீட்டர் ஆகும்.

காற்று தர குறியீடு (Air Quality Index) – யினை பொருத்தமட்டில் குறைந்தபட்சமாக சோழிங்கநல்லூரில் 155 ஆகவும் (மிதமான நிலை–Moderate) அதிகபட்சமாக ராயபுரத்தில் 349 ஆகவும் (மிக மோசமான நிலை–Very poor) இருந்தது அறியப்பட்டது.

தமிழ்நாட்டு மாசு கட்டுப்பாடு வாரியம் கேட்டுகொண்டதன் பேரில், சென்னை விமான நிலையம், விமான நிலையத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி மக்களுக்கு குப்பைகளை எரிக்கவேண்டாம் என வேண்டுக்கொள் விடுத்தது. சென்னை மாநகரில் இன்று (14.01.2020) குறைந்த ஈரபதம், மிதமான வெப்பநிலை, மிதமான காற்றின் வேகம் காரணமாக புகை மண்டலம் அதிகமாக தென்படவில்லை. இதனால் தொலைதூர காணும் தண்மை (Visibility) நன்றாக இருந்ததால், விமான புறப்பாடு மற்றும் வருகை போக்குவரத்தில் எந்தவித இடையூறும் ஏற்படவில்லை என அறியப்பட்டது.

இந்தளவு மாசு அளவு குறைந்ததற்கு பொதுமக்களிடையே இருந்த விழிப்புணர்வும், டயர், டியூப், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை எரிக்காமல் ஒத்துழைப்பு தந்ததும் முக்கிய காரணமாகும். இதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அரசு துறையினருக்கும், அரசுசாரா அமைப்பினருக்கும், குடியிருப்போர் நலச்சங்கங்களுக்கும், செய்தி மற்றும் ஊடகங்களுக்கும் குறிப்பாக பொதுமக்களுக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

// இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்//

******

14/1/2020

தலைவருக்காக
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

# <u>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்</u>

**புகையில்லா போகி விழிப்புணர்வு பிரச்சாரம்**




தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பு



தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பு




**ஊர்தி மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்**




**ஊர்தி மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல்**




பள்ளி மாணவர்களான விழிப்புணர்வு



ரோந்து பணியின் போது தடை செய்யப்பட்ட பொருட்களை எரிப்பதைனை தடுத்தல்




ரோந்து பணியின் போது எரிப்பதற்காக வைக்கப்பட்ட பழைய டயர்களை பறிமுதல் செய்தல்



மாண்புமிகு சுற்றுச்சூழல் அமைச்சர் அவர்கள் புகையில்லா போகி விழிப்புணர்வு பிரச்சாரத்தினை துவக்கி வைத்தல்

# TAMILNADU POLLUTION CONTROL BOARD

Ambient Air Quality in Greater Chennai Corporation during Pre Bhogi & Bhogi 2020

| Zone. No | Name of the Zone | Station Location | Pollutants concentration in µg/m³ (24 hrs average) 8.00 am to 8.00 am | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | $SO_2$ | | $NO_2$ | | $PM_{10}$ | | $PM_{2.5}$ | |
| | | | Pre Bhogi | Bhogi | Pre Bhogi | Bhogi | Pre Bhogi | Bhogi | Pre Bhogi | Bhogi |
| | | | 10 -11.01.20 | 13 -14.01.20 | 10 -11.01.20 | 13 -14.01.20 | 10 -11.01.20 | 13 -14.01.20 | 10 -11.01.20 | 13 -14.01.20 |
| I | Thiruvotriyur | Kathivakkam | 12 | 14 | 14 | 16 | 59 | 179 | 38 | 87 |
| II | Manali | Manali | 15 | 15 | 16 | 18 | 63 | 210 | 40 | 112 |
| III | Madhavaram | Thillai Nagar | 13 | 14 | 16 | 16 | 97 | 215 | 23 | 42 |
| IV | Tondiarpet | Tondiarpet | 8 | 11 | 16 | 19 | 108 | 245 | 42 | 149 |
| V | Royapuram | Royapuram | 11 | 12 | 17 | 21 | 78 | 274 | 38 | 184 |
| VI | Thiru.Vi.Ka. Nagar | Thiru.Vi.Ka. Nagar | 14 | 15 | 15 | 17 | 85 | 203 | 44 | 52 |
| VII | Ambattur | Ambattur | 14 | 15 | 16 | 17 | 72 | 254 | 42 | 110 |
| VIII | Anna Nagar | Anna Nagar | 7 | 10 | 15 | 17 | 61 | 195 | 41 | 110 |
| IX | Teynampet | T. Nagar | 10 | 13 | 19 | 24 | 68 | 185 | 25 | 98 |
| X | Kodambakkm | Kodambakkm | 8 | 9 | 12 | 17 | 66 | 166 | 32 | 104 |
| XI | Valasaravakkam | Karapakkam | 11 | 15 | 20 | 28 | 72 | 249 | 41 | 126 |
| XII | Alandur | Meenambakkam | 10 | 14 | 19 | 25 | 67 | 188 | 34 | 92 |
| XII | Adyar | Besant Nagar | 8 | 10 | 16 | 19 | 45 | 146 | 20 | 95 |
| XIV | Perungudi | Perungudi | 11 | 13 | 18 | 22 | 57 | 183 | 24 | 83 |
| XV | Shozhinganallur | Shozhinganallur | 9 | 12 | 19 | 23 | 54 | 183 | 22 | 72 |
| Standards values for 24hrs | | | 80 | | 80 | | 100 | | 60 | |

Note: IF - Instrument Failure

Dy.CSO

Assistant Director (Lab)
AEL, TNPCB, Chennai-32